# 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 28/1996)
(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The City of Madras (Alteration of Name) Act, 1996
## (Tamil Nadu Act No.28 of 1996)
(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**
**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**
**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 28/1996)

பிரிவு பொருளடக்கம்

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

2. பொருள்வரையறைகள்.

3. 'மெட்ராஸ்' மாநகரத்தின் பெயரை மாற்றுதல்.

# 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 28/1996)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 1996ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**மெட்ராஸ் மாநகரத்தின் பெயரை மாற்றம் செய்தலுக்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் நாற்பத்தி ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:—

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**— (1) இந்தச் சட்டம், 1996ஆம் ஆண்டு மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**— இச்சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி, "சட்டம்" என்பது, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது தமிழ்நாடு மாநிலத்தின் எந்தப் பகுதியைப் பொறுத்து மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றத் தகுதி உடையதாக இருக்கின்றதோ, அந்தப் பகுதி எதிலுமோ சட்டத்தின் ஆற்றல் பெற்றிருக்கின்ற செய்சட்டம், அவசரச் சட்டம், ஒழுங்குவிதி, ஆணை, துணை விதி, விதி, செயல்திட்டம், அறிவிக்கை அல்லது பிற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

3. **'மெட்ராஸ்' மாநகரத்தின் பெயரை மாற்றுதல்.**— பிரிவு 1இன் உட்பிரிவு (2)இன்படி குறிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அது முதற்கொண்டும், இந்த மாநிலத்தில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் வருகின்ற

"மெட்ராஸ்" எனும் சொல்லுக்குப் பதிலாக, "சென்னை" என்னும் சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.